**செய்தி வெளியீடு எண்: 07/02/2021** **நாள்: 13.02.2021**

**பத்திரிக்கை செய்தி**

**மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரத்துறை செயலாளரும், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைவருமான திரு. துர்கா சங்கர் மிஸ்ரா, இ.ஆ.ப., இன்று (13.02.2021) சென்னை மெட்ரோ இரயில் முதல் கட்ட விரிக்காவாகத்திற்கான வழித்தடத்தில் பணிகளை ஆய்வு செய்தார்**

மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரத்துறை செயலாளரும், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைவருமான திரு. துர்கா சங்கர் மிஸ்ரா, இ.ஆ.ப., இன்று (13.02.2021) வண்ணாரப்பேட்டையிலிருந்து விம்கோ நகர் வரையிலான முதல் கட்ட விரிவாக்கத்தில் நாளை (14.2.2021) முதல் மெட்ரோ இரயில் பயணிகள் சேவை தொடங்க உள்ளதையொட்டி நடைபெற்று வரும் அனைத்து முன்னேற்பாடுகள் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்

ஆய்வின் போது, செயலாளர் பல்வேறு ஏற்பாடுகள் மற்றும் பயணிகளுக்கான பாதுகாப்பு அம்சங்கள் குறித்து விம்கோ நகர் மற்றும் புது வண்ணாரப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையங்களில் ஆய்வு மேற்கொண்டார். மேலும், புதிய வழித்தடத்தில் பயணிகள் சேவை ஆரம்பித்த பின்னர் பயணிகளின் நலனுக்காக செய்யப்பட்டுள்ள அனைத்து ஏற்பாடுகள் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார்

இந்த ஆய்வின்போது, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர்கள் திருமதி. சுஜாதா ஜெயராஜ் (நிதி), திரு. ராஜீவ் நாராயண் திவேதி (திட்டங்கள்), திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்), மற்றும் உயர் அலுவலர்கள் ஆய்வின் போது உடன் சென்றிருந்தனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**